சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 15931/E/2024**

திரு.D.ஆனந்தன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
அம்பத்தூர் வட்டம்,
சென்னை மாவட்டம்- 600 053.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.D.ஆனந்தன் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.ஆ.ஆர்த்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 14.02.2024 |
| **கோரிய தகவல்**, Whether the Ambattur Town Survey Field Register Copy dated 09.08.2016, copy of which is enclosed herewith, was issued by the Head Quarters Thasildhar, Ambattur or not, If it was issued from your office, information the concerned file number, based on which the copy of the above document was issued உள்ளிட்ட 4 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், அம்பத்தூர் அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.5778.2025/அ1, நாள் 01.11.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 28.03.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 19.12.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந ந.க.எண்.5778.2025/அ1, நாள் 01.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர், தனக்கு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல எனவும், முழுமையான தகவல் பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கோரினார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 14.02.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், அம்பத்தூர் அவர்களின் 01.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக முதன் முதலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

b) மேலும், வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல என மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்ட வாதத்தினை ஆணையம் பதிவு செய்கிறது.

c) எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 4 இனங்களுக்கான தகவல் தொடர்பாக, மனுதாரிடம் விபரங்கள் கோரி, உரிய தகவல்களை சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

d) மேலும், மனுதாரரின் 14.02.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும், மனுதாரரின் 28.03.2024 தேதயிட்ட சட்டப் பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்கத் தவறிய அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலரின் எழுத்துப்பூர்மான விளக்கத்தினையும் பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக இவ்வாணயத்தில் **04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 15931/E/2024**

**பெறுநர்**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை மாவட்டம்- 600 053.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை மாவட்டம்- 600 053.

**மேல்முறையீட்டாளர்**

திரு.D.ஆனந்தன், த/பெ.G.தாமோதரன்,
எண்.46/93, பெரியார் நகர்,
பாடிகுப்பம் ரோடு, சென்னை - 40.

Copy to: File MP/PA-